[திரு. டி. எம். செல்வகணபதி]

இந்த காரைக்குடி நகராட்சித் திட்டம் என்பதை எடுத்துச் சொல்லி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. ஜி. பழனிசாமி: நம்முடைய அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் அளித்திருக்கிறார்கள். நான் அதிலே ஒன்றும் தப்பு என்று சொல்லவில்லை. குடிதண்ணீரிலே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பேச முடியாது. இந்த விளக்கத்தின்மீது நீங்கள் வேறு எதுவும் பேச முடியாது (குறுக்கீடு) உட்காருங்கள்.

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி, நீங்கள் நாகைப்பட்டினம் அருகே மீனவர்கள் காணாமல் போனது பற்றிக் கொடுத்து இருக்கிறீர்கள். அது பற்றிய முழு விவரமும் மத்திய அரசாங்கத்திடமிருந்து வரவேண்டி இருக்கிறது. இன்னொரு நாட்டிலிருந்தும் விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அதை உடனடியாக இன்றைக்கு எடுத்துக்கொள்ள முடியவில்லை. அந்த விவரங்களையெல்லாம் சேகரித்ததும் எடுத்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) கோவை, உக்கடம், பெரியகுளம் ஏரிப்பகுதிகளில் பழுதடைந்துள்ள தடுப்பு அணையைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ்.